# மண்ணியல் சிறுதேரில் நடையியல் மற்றும் கருத்தியல் ஆய்வு

# Behavioral and Cognitive Studies in *Manniyal Siruther*

***முனைவர் எம். சோலையன்***
மூத்த ஆய்வறிஞர்
இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம்

**Dr. M. Solayan**
*Senior Fellow*
*Ministry of Culture, Government of India*

## *ஆய்வுச் சுருக்கம்*

*இவ்வாய்வுக் கட்டுரை பண்டிதமணி கதிரேசச் செட்டியாரின் மண்ணியல் சிறுதேர் எனும் நாடகத்தில் காணப்பெறும் நடையியல் உத்திகளையும் கருத்தியலையும் விளக்கிக் காட்டுவதாகும். இந்நாடகத்தில் உவமை, உருவகம், தற்குறிப்பேற்ற அணி, சொல்லை மீண்டும் பயன்படுத்தும் உத்தி, அஃறிணைப் பொருட்களையோ, கேளாரையோ விளிக்கும் உத்தி, விடை எதிர்பாராது வினவும் உத்தி, உயர்வு நவிற்சி அணி மற்றும் நகைச்சுவை ஆகியன பயன்படுத்தப் பட்டிருப்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. நீதிமன்றத்தால் தவறான தண்டனை பெற்ற கதைத்தலைவன் உண்மையே இறுதியில் வெல்லும் என்ற கூற்றின்படி மீண்டுவருவதே நாடகத்தின் மையக் கருத்தாகும். இந்நாடகம் கிரெய்மாஸின் திறனாய்வுக்கோட்பாட்டின் வழியிலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.*

***முதன்மைச் சொற்கள்:*** *மண்ணியல் சிறுதேர், நடையியல் மற்றும் கருத்தியல் ஆய்வு, உவமை, உருவகம், சொல்லைத் திரும்பப் பயன்படுத்துதல், அஃறிணைப் பொருளையோ, கோளாரையோ விளிக்கும் உத்தி, விடை எதிர்பாராது வினவும் உத்தி, உயர்வு நவிற்சி அணி, நகைச்சுவை, கிரெய்மாஸின் திறனாய்வுக் கோட்பாடு*

## Abstract

*This article attempts to analyse the stylistic aspects handled by Kathiresa Chettiyar in Manniyal Siruther. Moreover, it attempts to anlayzse the theme of the play. In Manniyal Siruther, one could come across stylistic devices such as simile, metaphor, repetition, crescendo, exaggeration, apostrophe, rhetorical questions and humour. While considering the theme of the play, it is realized that it talks about the consequences of the erroneous judgement delivered by the authorities. It ascertains the maxim that truth always triumphs. This play was also analyzed according to Greimas' structural semantics.*

**Keywords**: *Manniyal Siruther, Stylistic and Thematic Analysis, Simile, Metaphor, Repetition, Apostrophe, Rhetorical Question, Crescendo, Greimas' Structural Semantics.*

**Citation**

Solayan, M. "Behavioral and Cognitive Studies in *Manniyal Siruther*." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 64-76.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20069354*

*முர்ரே என்னும் திறனாய்வாளர் ஒரு படைப்பாளியின் தனித்துவத்தை அவருடைய எழுத்தின் மூலம் கண்டறிய முடியும் என்று கூறுவார். மேலும் அவரின் நடையானது உணர்வுகளையும், எண்ணங்களையும் எடுத்தியம்புவதாக அமையும் என்றும் சுட்டிக்காட்டுவார். மண்ணியப் சிறுதேரில் பண்டிதமணி கையாளும் நடையில் மனித உணர்வுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் காணமுடியும்.*

**மண்ணியல் சிறுதேரில் பயன்படுத்தப்பெற்ற நடையியல் உத்திகள்**

*மிருச்ச கடிகா என்னும் சமஸ்கிருத நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்த கதிரேசன் செட்டியாரின் மண்ணியல் சிறுதேர் என்னும் தமிழ் நாடகத்தில் நடையியல் உத்திகள் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பேராசிரியர் மீரா இந்நூலில் கற்பனைவளமும், கருத்தாழமும் ஓசையின்பமும்மிக்க 382 பாடல்கள் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். ஒன்பது சுவைகளையும் அவற்றுள் தலைமைச் சுவையாக நகைச்சுவையையும் சூத்திரகன் கையாண்டுள்ளார் என்கிறார். எளிமை, இனிமை இவற்றோடு வருணனை, சிலேடை, உவமை, உருவகம் மற்றும் பிற அணிகளையும் கையாண்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். பேரறிவாளனாகிய சூத்திரகன் உலகுக்குப் பெருந்திருவாக மிருச்சகடிகத்தைத் தந்துள்ளார் வழக்கிறந்த வடமொழியில் ஓர் உயிருள்ள நாடகம் அவர் நாடகம்(42) என்கிறார் மீரா.*

**உவமையும் உருவகமும்**

*இருபொருள்களையோ அல்லது செயல்களையோ ஒப்பிட்டுக் கூறும் போது உவமையணியைப் புலவர்கள் பயன்படுத்துவர். மண்ணியல் சிறுதேரில் உவமையணி பலவிடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*சூத்திரதாரன் நீண்ட நேரம் இசை பாடியபிறகு சோர்வடைந்து பசியினால் வாடுகிறான். இதனை அவனே ஒரு உவமை மூலம் பசியின் கொடுமையை விவரிக்கின்றான்.*

*முதுவேனிற்காலத்தில் கடுங்கதிர்க் கிரணங்களால் உலர்ந்த தாமரைக்கொட்டைபோல் துடிக்கின்ற கருமணிகளையுடைய என் கண்கள் பசியினால் சுழலுகின்றன (க69)*

*கோடைக்காலத்தில் வெயிலால் உலர்ந்த தாமரைக்கொட்டைகளைப் போலக் கண்மணிகள் பசியினால் சுழலுவதாக உவமையைப் பயன்படுத்துகிறார் ஆசிரியர். மேலும் தாமரைத் தண்டுபோல உடலுறுப்புக்கள் வாடுவதாகவும் கூறுகிறார்.*

*உலர்ந்த தாமரைத் தண்டுபோல என் உடலுறுப்புக்கள் உணவு வேட்கையால் வாடுகின்றன (க69)*

*தனது இல்லத்தில் புகுந்த சூத்திரதாரன் இல்லத்தின் பொலிவான தோற்றங்கண்டு உவமையுடன் வர்ணிக்கிறான்:*

*இரும்பு முதலிய உலோகங்களானாய பண்டங்களை ஈர்த்தலாற் கரியதும், அதனால் வேறு பல நிறங்களை உடையதும் ஆகிய இந்நிலம் திலகத்தான் அலங்கரிக்கப்பட்ட மங்கைபோல மிகவும் விளக்கமுற்றுள்ளது. (க70)*

*இல்லம் அலங்கரிக்கப்பட்ட மங்கை போல விளக்கமுற்றுள்ளதாக சூத்திரதாரன் உவமை நயத்துடன் பேசுகிறான்.*

*அடிசில், நெய், தயிர் முதலிய சுவைப்பொருள்கள் அங்காடியில் உள்ளனவென்று மனைவி கூறியதும், வளைவு சுவர்க்கு ஆதாரமாக இடப்படும் செங்கல்லைப்போல் அவனை உயரத்தூக்கி அவள் வீழ்த்திவிட்டதாக உவமை நயத்துடன் கூறுகிறான் சூத்திரதாரன். (க71) மனைவி நோன்பு மேற்கொள்ளுமாறு அறிவுரை பகர்ந்த சூர்ணவிருத்தனைப் புது*

*மணப்பெண்ணின் குழற்கற்றையைப் புனைவதுபோல மணப்பொருட்களால் பூசிப்புனைந்து அரசன் வெட்டி வீழ்த்த வேண்டும் என்று சூத்திரதாரன் ஆசைப்படுகின்றான். (க73) இங்கும் உவமையணி பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*சாருதத்தர் செல்வராயிருந்தபோது நெய்யொழுகும் கொழுக்கட்டைகளை உண்டு, பற்பல உண்கலங்கள் சுற்றிலும் இருக்க, ஓவியம் எழுதுபவன்போல விரல் நுனிகளால் பல்வகை உணவு வகைளைத் தொட்டுத்தொட்டு எறிந்ததை மைத்திரேயன் நினைவு கூர்கிறான். (க75) மேலும் அவன் பின் வருமாறு கூறுகிறான்:*

*நகரச்சதுக்கங்களில் திரியும் ஊரேறுபோல் வாயசைத்துக் கொண்டிருப்பேன். யான் இப்பொழுது சாருதத்தரது வறுமையால் மாடப்புறாப் போல் எவ்விடத்தினும் திரிந்து படுத்துறங்குதற் பொருட்டு இவ்விடத்தை அடைகின்றேன் (க76).*

*செல்வம் மிக்க காலத்தில் தெருவில் திரியும் காளைகளைப் போல வாயசைத்துக் கொண்டிருந்தான் மைத்திரேயன். ஆனால் சாருதத்தர் வறுமையுற்றபோது மாடப்புறாவினைப் போல் அலைந்து திரியும் நிலையாயிற்று என்று உவமைநயத்துடன் பேசுகிறான்.*

*சாருதத்தர் பிறர்க்கு ஈந்து வறிய நிலையை அடைந்தபோதும், ''விண்ணவர்கள் உண்டு எஞ்சிய பிரதமைப்பிறைபோல மிகவும் அழகுடையது அவருடைய வறுமைநிலை'' என்று விதூடகன் கூறுகின்றான். (க79)*

*சாருதத்தன் தன் வறுமை நிலையை எண்ணி வருந்துகின்றான். விடமுட்களையுடைய வண்டுகளுக்கு அஞ்சி அவற்றால் துன்புறுத்தப்படாத இடங்களில் இடைப்பையல்கள் திரிதல் போலப் பிறர்க்கு ஈந்து தாமும் அனுபவிக்கும் நல்லோரின் கொடை அனுபங்களுக்கு அஞ்சிச் செல்வம் உலோபிகளைச் சென்று அடைகிறது என்று கூறுகிறான் சாருதத்தன். இக்கூற்றிலும் உவமையணி பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*இட, வலப் பக்கங்களை மாற்றிக் காட்டும் கண்ணாடி போலப் பிராமணனான விதூடகனுக்கு எல்லாம் விபரீதமாக முடிகின்றன. இராச வீதியில் நடந்து செல்ல விதூடகன் அஞ்சுகிறான். விலை மகளிரும் விட சேடர்களும் அங்குத்திரிவதால் தவளையை விரும்பும் கரும்பாம்புக்குப் பெருச்சாளி எதிர்ப்பட்டது போல், தான் எதிர்ப்பட்டு அவர்களால் கொல்லப்படும் நிலை ஏற்படும் என்று உவமை நயத்துடன் கூறுகிறான். (க83)*

*விடனும், சகாரனும் தன்னைப் பின்தொடர்ந்து வருவது கண்டு அஞ்சி வசந்த சேனை ஓடுகிறாள். அதனைக்கண்டு விடன் ''கலக்கமுறு மான்பிணை போல் ஓடுகின்றாய்'' என்று உவமை நயத்துடன் கூறுகிறான். (க84) விடனைத் தொடர்ந்து சகாரனும் வசந்தசேனையை நிற்குமாறுவேண்டுகிறான்:*

*நெருப்புத்திரளின் உருப்புற வீழ்தரும் இறைச்சித் துண்டென என் மனங்காமனால் வெதுப்பப்படுதலை மெல்லியால் உணர்தி (க85) நெருப்புக் குவியலுக்குள் விழுந்த இறைச்சித் துண்டுபோல அவன் மனம் வெதுப்பப்படுவதை அவள் உணரவேண்டும் என்று இறைஞ்சுகிறான் சகாரன்.*

*பண்டிதமணியவர்கள் தம்குறிப்புரையில் சகாரனின் சொற்களில் பொருளின்மை, முன்னொடு பின் முரணுதல், மாறுகொளக்கூறல், உவமை வழு, உலகவிருத்தம், தேயவிருத்தம், நியாய விருத்தம், நூல் வழக்கொடு மாறுகொளல், ஏதுவின்மை, பயனின்மை முதலிய வழுஉக்களைக் காணலாம் என்று கூறியுள்ளார்.*

*தாவல், நடத்தல், தட்டழிந்து ஓடல் ஏன்? என்று சகாரன் கேட்கும்போது கூறியது கூறலைப் பயன்படுத்துவதைக் காணலாம்.*

*சேடனும் "பீலி நிறைவேனில் மயில் போல பீதி உறுவது ஏன்? என்று கேட்கிறான். விடனும் "நல்லிள வாழைபோல் நடுங்கிப்போவது ஏன்?" என்று வினவுகிறான். இருவர் கூற்றிலும் உவமை காணப்பெறுகிறது. சகாரனும் கூறியது கூறல் என்னும் வகையில் "மதனை, உருவிலி, மன்மதன்" எனவும், அஞ்சிப் பயத்தால் வஞ்சி நீ தாவுதி, தட்டிழந்து ஓடுதி; விட்டெனைச் செல்லுதி எனவும் கூறுகிறான். விடனும் வசந்தசேனை கருடனைக் கண்டு அஞ்சும் பாம்பினைப்போல் அஞ்சுவதாகக் கூறுகிறான். (க86)*

*வசந்த சேனையைச் சகாரன் "வசந்தசேனை காசினைப்பறிக்குங் காமன் கைக்கசை" என்று காமனின் சாட்டை என்ற பொருளில் உருவகமாகக் கூறுகிறான். மேலும் ஆடல் மகள், குடிகேடி என்று அவளுக்குப் பதினொரு பெயர் கூறிப் பத்து என முடித்துக் காட்டுவது மாறு கொளக் கூறல் என்னும் பிரிவில் வருகிறது. (க87)*

*வசந்தசேனை அணிந்த ஒண்குழை அவள் கன்னத்தை உராய்ந்து நிற்கிறது. காமுகரின் நகவிரல் தடவும் காரணத்தால், வசந்தசேனை யாழை ஒப்பாள் என்றுவிடன் உவமையுடன் பேசுகிறான். (க87)*

*மேலும் சகாரன் "இராமற்கு அஞ்சியோடும் திரௌபதி போல் செல்லல் ஏன்' என்றும், "சுபத்திரை தன்னை அனுமான் கவர்ந்ததற்கு ஒப்ப உன்னைக் கவர்வேன்" என்றும் கூறுகையில் உவமையணி பயன்படுத்தப்பட்டுள்ளது. (க88)*

*விடனோ "நண்ணா நகரத் தெய்வம் போல் நடத்தலென் நாமுறவே" என்று உவமையணி வெளிப்படும்படிக் கூறுகிறான். (க89)*

*சகாரனோ, காட்டிலே நரியொன் றினைத் தொடரும் நாய்கள் போல் தாங்கள் தொடர்வதாகக் கூறுவது உவமை வழு ஆகும். பெண் நரியை ஆண் நரியே பின்தொடரும்; நாய்கள் அன்று. (க89)*

*வசந்தசேனை சகாரனிடம் தன்னுடைய அணிகலன்கள் எவையேனும் வேண்டுமா என்று வினவுகின்றாள். ஆனால் விடனோ "வேண்டாம்" என்று மறுத்து, பூந்தோட்டத்து கொடிக்கணுள்ள மலர்கள் பறிக்கத் தக்கன அல்ல் ஆதலின் அணிகலன்கள் வேண்டா என்று கூறுகையில் பூந்தோட்டக் கொடியாக வசந்த சேனையையும், அணி கலன்களை மலர்களாகவும் உருவகிக்கின்றான். மற்றோர் இடத்தில் வழியிடைத்தோன்றிக் காணு பூங்கொடியினை யொப்பாய் என்று உவமை நயத்துடன் பேசுகிறான். தடம், பூங்கொடி, நாவாய் போன்றவள் வசந்த சேனை என்று கூறுகிறான்விடன்.*

***அந்த தடம் பூங்கொடி நாவா யானையை நீ***
***யாவரையும் அடைதற் பாலாய் என்பான் அவன்.***

***(க.94)***

*சகாரன் உழுந்துக் குவியலில் புகுந்த மையுருண்டை போல வசந்தசேனை மறைந்தாள் என்று உவமை நயத்துடன் கூறுகிறான்:*

*ஐய, ஐய, பேரிருளில் உழுந்துக்குவியலுள் புகுந்த மையுருண்டை போலப் பார்த்திருக்கும் பொழுதே வசந்தசேனை மறைந்து விட்டாள் (க96)*

*சகாரன் மாறுபடக் கூறலில் வல்லவன் எனக்காட்டப் பின்வரும் வரிகள் சான்றாகும்:*

*மாலை மணத்தைக் கேட்கின்றேன். இருள் நிரம்பிய மூக்கினாலோ அணி கலன்களின் ஓசையை நன்கு வெளிப்படையாகக் காண்கின்றேனில்லை (க97)*

*விதூடகனின் பின்வரும் சொற்களில் உவமை நயம் வெளிப்படுத்துகிறது:*

*வேள்வியின் நிமித்தம் கொலைப்படுத்தக்கொண்டு வரப்படும் ஆட்டின் இருதயம் போல முன்னிரவில் வீசும் இளங்காற்றால் விளக்கு மிகவும் நடுக்கமுறுகிறது (க103)*

*கொலைக்களத்தில் நிற்கும் ஆட்டின் இதயம் போலக்காற்றால் விளக்கு நடுக்கமுறு வதாக உவமை சொல்லப்பட்டுள்ளது.*

*வெயிற் காலத்தில் நீர்த்தடம் மக்கட்கு உதவுவது போல, உணவற்ற மக்கட்கு உணவளித்து வறியவனானான் சாருதத்தன் என்றுவிடன் புகழ்கின்றான்.*

***நண்ணு நீள் வெயிற்காலத்தில்***
***நல்ல நீர்த்தடம் போல்,***
***உண்ணும் வேட்கையை மக்களுக்கு***
***ஒழித்தலான் உலர்ந்தான்***

***(க/107)***

*சூத்திரகர் உருவகம் மூலமாக சாருதத்தரை உயர்த்திப் பேசுகிறார். எளியவர்க்கு உதவுவதால் அவர் கற்பகத் தருவாகிறார். அறிஞர் நிலையை விளக்கும் கண்ணாடி நல்லன தீயன கண்டறியும் உரைகல்லாகவும் அவர் விளங்குகிறார். ஒழுக்கமாம் படுகரை கடவாக்கடல் அவர்.*

***கலைபயில் அறிஞர் தம் நிலையளந்துணர***
***உற்ற கண்ணாடி; பற்றுநற் செய்கைக்கு***
***ஒல்லுநற் கட்டளைக்கல்லே; ஒழுக்கமாம்***
***படுகரை கடவாக்கடலே,***

***(க/109)***

*வசந்தசேனை திடீரென மறைந்தது பற்றி விடன் உவமை நயத்துடன் விளக்குகிறான்:*

***அந்தகன் பார்வை போலும்***
***ஆதுரன் வன்மை போலும்***
***மந்தன துணர்வு போலும்***
***மடியுளான் சித்தி போலும்***
***சிந்தை நைந்தலையப் பெற்றான்***
***வந்தவள் பகைவரன்பின்***
***மறைந்தனள்***

***(க/10)***

*சகாரன் விதூடகனை நோக்கி ''காக்கைக்கால் போன்ற தலைச்சிரம் உடையாய்'' என உவமைநயத்துடன் வர்ணிக்கிறான். (க/111) மேலும் அவன் தொடர்ந்து ''கதவிடுக்கினில் அகப்பட்ட விளம்பழக் குடுக்கை போல நின்தலையை மடமடவென நெரித்துவிடுவேன்'' என்றும் கூறுகிறான். (க/113)*

*விதூடகனோ வசந்தசேனையின் பின்தொடர்ந்து செல்லவிரும்பவில்லை. ''இவ்வேழைப் பார்ப்பானாகிய என்னை நாற்சந்தி கூடுமிடத்துப் போடப்பட்ட உணவுப் பொருள்களை நாய்கள் கௌவுதல்போல் விளையாட்டுப் பையல்கள் நலிவுறுத்திக் கெடுப்பர்'' என நகைச்சுவையுடன் உவமை கூறிவிளக்கிறான். (க/121)*

*எண்ணெயில்லாமல் விளக்குகளை ஏற்ற இயலாத நிலையில் விதூடகன் 'நம் விளக்குகள் எண்ணெய் இல்லாமல் வறுமைமிக்க காமுகர்களை வெறுத்தொதுக்கும் விலை மகளிர் போல நேயமற்றிருக்கின்றன என்று உவமை நயத்துடன் பேசுகிறான். (க/122)*

*உச்சயினி நகரத்தெருக்களில் மதம் கொண்ட யானை ஒடியாவரையும் அச்சுறுத்துகிறது. தாமரைத் தடாகத்தைத் தன்கைகால் தந்தங்களால் கலக்குதல் போல உச்சயினி நகரத்தையும் யானை கலக்குவதாகக் கன்னபூரகன் கூறுகிறான். (க/156)*

*கன்னபூரகன் யானையிடம் அகப்பட்ட துறவியைக் காப்பாற்றி, யானையை அடக்கியதால் மகிழ்வுற்ற நகர மக்கள் அனைவரும் அவனருகில் ஓடிவந்தனர். "அதனால் அந்நகர் ஒரு பக்கத்திற் சுமைமிக்க தோணியைப் போலாயிற்று" என்ற தோணியை நகருக்கு உவமையாகக் கூறுகிறான் கன்னபூரகன். (க157)*

*விதூடகன் வடமொழியைப் படிக்கும் பெண்மக்களைப் புதிதாக மூக்குக்கயிறு கோக்கப்பட்ட இளம்பசுவிற்கு ஒப்பிடுகிறான். இன்னிசைபாடும் ஆண்மகனை மந்திரம் செபிக்கின்ற கிழப்பருவப் புரோகிதனுக்கு ஒப்பிடுகிறான். இவ்வவுமைகள் மூலமாகப் பெண்கள் வடமொழி படிக்கலாகாது என்பதும் ஆண்கள் பாடலாகாது என்பதும் தெரிவிக்கப்படுகின்றன. (க161)*

*நீரில் மூழ்கிய யானையின் கோட்டு நுனிகள் சிறிது சிறிதாக மறைதல் போலத்திங்கட் செல்வன் இருள் பரவுவதால் அதனிடைத் தன் கலைகளை ஒடுக்கி மறைவடைகின்றான் என்று வர்ணிக்கும் போது உவமைநயம் வெளிப்படுகிறது. (க163)*

*விதூடகன் தன் இயல்பைப் பற்றிக் கூறுகையில் உவமையைக் கையாள்கிறான்:*

*பல விடப் பாம்புகளின் நடுவே நஞ்சில்லாத நீர்ப்பாம்பு போலப் பல அந்தணர்கள் நடுவில் யானும் ஓர் அந்தணன். (க.165)*

*சருவிலகன் தன்னைப் பூனையாகவும், மானாகவும், பருந்தாகவும், நாயாகவும், பாம்பாகவும், விளக்காகவும், பல்லியாகவும், குதிரையாகவும் மற்றும் தோணியாகவும் உருவகித்துக் கூறுகின்றான். மேலும் அஃறிணைப் பொருட்களைத் தன்னுடன் ஒப்பிட்டுப் பெருமை பேசுகிறான்:*

*ஓடலிற்பாம்பு; நிற்பின் உறுமலை; சுழன்று யாண்டும் ஆடலிற் கலுழன்; யாரும் அறிவுறா இடத்தில் தங்கம்; நாடலின் முயலை யொப்பேன். நண்ணிய பிறரைப் பற்றிக் கோடலிற் செந்நாய்; அஞ்சாக் குணத்தினான் மடங்கல் ஒப்பேன். (க178)*

*பெண் அரவின் செலவு மிக விரைவுடையது. அதனால் அது வெளிப்பட்ட மறுகணத்திலே மறையும் இயல்பினதாகும். அதுபோலத் திரு ஓரிடத்தும் நிலைத்திராது. மகளிர் உள்ளமும் அவ்வாறே அமையப் பெற்றது என்று உவமையுடன் சருவிலகன் பேசுகிறான்.*

*கணிகையர் பஞ்சின் சாற்றைப் பிழிந்து கொண்டு சக்கையை விலக்குதல் போலப் பொருளாளரின் பொருளைக் கவர்ந்து கொண்டு அவரை ஒழித்து விடுவர் என்று சருவிலகன் கூறுகிறான்.*

***இடும் பொருள் பறிக்கு மாதர்***
***ஈகை இல் மகனைச் செம்பஞ்சு***
***ஒடுங்கிய சாறுகொண்டே***
***ஒழித்தல் போல் ஒழிப்பர் அம்மா (க203)***

*விதூடகன் வசந்தசேனையின் மாளிகையை வர்ணிக்கையில் உவமையைப் பயன்படுத்துகிறான். இளம் பெண்களால் அடிக்கப்பெறும் மத்தளங்கள் மேகங்களைப் போல் கம்பீரமாக ஒலிக்கின்றன. வெண்கலத் தாளங்கள் ஆகாயத்தினின்றும் வீழ்கின்ற விண்மீன்களை ஒப்பவீழ்கின்றன. புல்லாங்குழல் வண்டின் ஒலிபோல இனிமை தருகிறது. யாழ் பொறுமையின்மை யால் ஊடிச்சினக்கும் காதற் கிழத்தியை யொப்பமடித்தலத்து இருத்தப்பெற்று விரல் நகங்களால் தொட்டுத்தை வரப்படுகின்றது. மலர்களில் உள்ள தேனையுண்டு உலவும் பெண் வண்டுகளைப் போல இக்கணிகைச் சிறுமிகள் இனிமையாகப் பாடியாடுகின்றனர். மேலும் வயிறு நிரம்பிய அந்தணனைப் போலக் கூட்டிலிருக்கும் கிள்ளை நன்மொழிகளைப் படிக்கின்றது. வீட்டில் வளரும் சாரசப்புட்கள் கிழப்பருவச் சேவகர்களைப் போல நானாபக்கத்தும் உலவுகின்றன. (க220)*

*சேடன் விதூடகனின் மேல் சிறு கற்களை எறிகிறான். விதூடகன் வேலி சூழ்ந்த விளாமரத்தை யெறிதல்போல என்னைச் சிறு கற்களால் எறிகின்றவன் யார்? என்று உவமை நயத்துடன் வினவுகின்றான். (க241)*

*சாருதத்தன் மழையின் தாரை யாழைப் போல இசையை ஏற்படுத்துவதாகக் கூறுகின்றான்:*

***ஏலுற மீட்டப்பட்டிங்***
***கிசைதரும் இனிய யாழைப்***
***போல இம் மழையின் தாரை***
***தாளத்தில் பொருந்தி வீழ்வ (க274)***

*சாருதத்தனின் மகன் பொன்வண்டி கேட்டு அழுவதைக் கண்டு வசந்தசேனை, ஆ! தெய்வமே! தாமரையிலைக்கண் வீழ்ந்த நீர்த்திவலைகளைப் போன்ற மக்களுடைய செல்வங்களால் நீ விளையாடுகின்றாய் என்று கூறும் போது தாமரையிலையின்மீது விழும் நீர்த்திவலைகளுக்கு நிலையற்ற செல்வத்தை ஒப்பிடுகிறாள். (க280)*

*சந்தனகன் தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஆரியகனைப் பார்த்து ''இடைச்சிறுவனாகிய இவ் ஆசிரியகன் பருந்தினால் துரத்தப்பட்டு வேடன் கையில் வீழ்ந்த பறவைபோல எம் கைவயப் பட்டான்'' என்று உவமை நயத்துடன் கூறுகிறான். (க297)*

*விலங்கு மாட்டிய நிலையில் சாருதத்தனின் வண்டியில் ஏறிக் கொள்கிறான் ஆரியகன்.*
*பொன்னியலுந் தன் குடம்பைதனிற் காக்கை போற்ற வளர் குயில்போல் போவேன்*
*என்று ஆரியகன் உவமைநயத்துடன் கூறுகிறான். (க308)*

*ஆரியகனின் விலங்குகளை அகற்றுமாறு சாருதத்தன் கட்டளையிட சேடன் விலங்குகளை நீக்குகிறான். அப்போது ஆரியகன்,*

*அன்பு மயமான வன்மைமிக்க வேறு விலங்குகளை அளித்துவிட்டீர்கள் என்று கூறும்போது அன்பாகிய விலங்குகள் என்று உருவக அணியைப் பயன்படுத்துகிறான். (க312)*

*சகாரன் துறவியை அடிக்கிறபொழுது,*

*செந்நிற முள்ளங்கிக் கிழங்கின் தலைப்பாகத்தை முறித்தல் போல் உன் தலையை முறித்துவிடுவேன் என்று உவமைநயத்துடன் பேசுகிறான். (க319)*

*வண்டி ''குரகுர'' என்னும் ஒலியுடன் வந்தபோது'', ''வண்டி வந்துவிட்டது'' என்று சகாரன் கூறுகிறான். ''எப்படி அறிந்தீர்கள்'' எனவிடன் வினவியபோது, ''கிழப்பன்றிபோலக் குரகுர என்னும் ஒலி வந்தது'' என்று சகாரன் கூறுகையில் வண்டியினைக் கிழப்பன்றிக்கு ஒப்பிடுகிறான். (க331)*

*சகாரனிடம் மாட்டிக்கொண்ட வசந்தசேனையோ தன்வரவு களர் நிலத்தில் விதைத்த வித்துக் கூட்டம் போலப் பயனிலதாயிற்று என்று வருந்துகையில் உவமை நயம் தெரியவருகிறது. (க335)*

*விடன் வசந்த சேனையின் நிலையினை நினைத்து வருந்தி ''மான்பேடு புலியைத் தொடர்கின்றதே'' என்று உருவகமாகப் பேசுகின்றான். மேலும், ''அன்னப்பேடு அரச அன்னத்தைச் சாராது இழிந்த காக்கையை அடைகின்றது ஏன்?'' என்று வினவும்போது பிறிதுமொழிதல் அணி பயன்படுத்தப்பட்டுள்ளது. (க336)*

*சகாரனை வசந்தசேனை எட்டிக்காலால் உதைத்தபோது சகாரன் தன்னைப் பிணத்திற்கும், வசந்த சேனையை நரிக்கும் ஒப்பிட்டு,*

*தன்னைக் காட்டிற் சவத்தை நரிமிதித்தென்னக் காலினால் எற்றியுதைத்தனை என்று அரற்றுகின்றான். (க340) தான் சொன்னதை நிறைவேற்றாத விடனைக் கிழநரி என்று உருவகிக்கிறான் சகாரன்.*

இக்கிழநரி பாவத்திற்கு அஞ்சுகிறது என்று அவன் கூறுகிறான். (க345)

நீதிமன்றத்தைப் பற்றிச் சாருத்தன் கூறும் சொற்களில் உருவகம் காணப்பெறுகிறது. அமைச்சர் நீர்ப்பெருக்காகவும், போக்குவரவு புரிதலில் தூதர் அலைகளாகவும், ஒற்றர் முதலையாகவும், யானை, குதிரை அவுணர், அரக்கராகவும், வாதி பிரதிவாதிகள் கழுகுகளாகவும், நஞ்சு போன்றமையைக் கொண்டு தீங்குவிளைக்கும் கணக்கர் பாம்பாகவும் உருவகம் செய்யப்பட்டனர். நீதிமன்றம் கொடுமையான தண்டனை தருதலால் கடலாகவும் உருவகம் செய்யப்பட்டது. (க391)

சகாரனை நோக்கி விதூடகன் “உன்மனம் போல வளைந்த இம்மரத் தடியால் உன் தலையை அடித்துப் பல துண்டுகளாகச் சிதறச் செய்வேன்” என்று உவமை நயத்துடன் கூறுகிறான். (க410)

வசந்தசேனை சாருதத்தரைக் காண விரும்பிய போது சந்திரனது தரிசனத்தால் ஆம்பலோடை இன்புறுதல் போல அப்பெருமான் தரிசனத்தால் யான் இன்புறச்செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றாள். இங்கு உவமை அணி பயன்படுத்தப்பட்டுள்ளது. (க458)

சாருதத்தரைக் கொல்ல விருக்கின்ற வேளையில் அங்கு சென்ற வசந்த சேனையைப்பார்த்து, பைங்கூழ் செழிக்கப் பயன் செய்மழை முகில் போல் இங்குற்றாள் யாவள் இவள்? என்று உவமைநயத்துடன் வினவுகிறான் சாருதத்தன். (க464)

**தற்குறிப்பேற்ற அணி**

சண்டாளர் பெண்கள் அழுததால் பெருக்கெடுத்த கண்ணீரை விண் அழுதலாகவும், வச்சிரப்படை உருகி விழுதலாகவும் தற்குறிப் பேற்றத்தாற் கூறினர். (க429)

**மாறுபடப் பேசுதல்**

மேலும் வசந்த சேனையை வண்டியில் பார்த்துவிட்டு, ஈதென்ன? நரிகள் பறக்கின்றன. காக்கைகள் நடக்கின்றன. இவ்வையன் அரக்கியின் கண்களால் உண்ணப்பட்டுப் பற்களால் பார்க்கப்படு முன்னரே யான் ஓடிவிடுகின்றேன் என்கிறான் சகாரன். இங்கே மாறுபடப்ட பேசும் சகாரனின் உணர்வு வெளிப்படுகிறது. நரிகள் பறப்பதுவும், காக்கைகள் நடப்பதும், அரக்கி தன் கண்ணால் உண்ணுவதும், பற்களால் பார்ப்பதும் நகைச்சுவை யூட்டும் பேச்சாகும். (க336)

மாறுபடப் பேசுதல் என்னும் வகையில் 'அரக்கி ஏன் நின்னைத்திருடவில்லை? அன்றிக் கள்ளனாயின் ஏன் நின்னை உண்ணவில்லை என்று சகாரன் கூறுவதும் அடங்கும்.

சகாரன் சேடனைப் பார்த்து எருதுகள் அறுந்து போகவில்லையா? கயிறுகள் இறந்து போகவில்லையா? நீயும் இறக்கவில்லையா? எனக் கேட்பது மாறுபடக் கூறுதல் என்னும் வகையில் அமையும். (க332)

**நகைச்சுவை**

மண்ணியல் சிறுதேரில் நகைச்சுவை மிகுந்து காணப்பெறுகிறது. சகாரன் சேடனைப் பார்த்து. “வண்டியும் வந்ததா?” என்றும் எருதுகளும் வந்தனவா? என்றும், கேட்கிறான். எருது பூட்டிய வண்டி சேர்ந்து வரும் என்றறியாமல் கேட்கிறான். இறுதியாக வண்டி ஓட்டுபவனைப் பார்த்து நீயும் வந்தனையா? என்று கேட்பது நகைப்புக்குரிய செய்தியாகும். (க331)

விதூடகன் சேடியைப் பார்த்து அம்மா, பட்டினாலான மேலாடையைப் போர்த்துக் கொண்டு, பலவான அணிகலன்களைப் புனைந்து உடல் பருத்துச் சரிந்திருத்தலால் தடுமாறி நடந்து

*சுற்றித் திரிகிற இவன் யாவன்? என்று உடல் பருத்த மனிதரைக் குறிப்பிட்டுக் கேட்கிறான். அவன் வசந்த சேனையின் உடன் பிறந்தவன் ஆவான். அவனைப் பற்றி விதூடகன் வர்ணிப்பது நகைச்சுவையை அளிக்கிறது. (க224)*

*வசந்தசேனையின் நற்றாயைப்பார்த்து விதூடகன் பேசும் பேச்சும் நகைச்சுவை நிரம்பியது. தூய்மையில்லாத உணவை உண்ட பார்ப்பானைப் போன்ற இடாகினிப் பேயாகிய இவளது வயிற்றின் பருமை என்னே! பெரிய தெய்வ உருவத்தைப் போன்ற இவளை முதலில் உள்ளே புகுத்திப் பின்னர் இவ்வீட்டின் வாயில் வழி நிருமிக்கப்பட்டது கொல்? என்று அவன் கூறுவது பரிகாசத்தை ஏற்படுத்துகிறது. (க225)*

*விதூடகனும் சேடனும் ஒருவரை யொருவர் பழித்துக் கொள்ளும் உரையாடல் நகைச்சுவை நிரம்பியது. (க242)*

*விதூடகன்: இழிதகவ! இப்பொழுது ஈதென்ன? வறுமைக் காலத்தில் கிழத்துறவி போல ஸா ஸா என்று மேல் முச்செறிகின்றாய்?*

*சேடன்: ஏட! நீயும் இப்பொழுது இந்திரவிழாவிற்கு பலிவிருப்பமுள்ள காக்கைபோலக் "காகா" என்று எதற்காகக் கத்துகின்றாய்?*

*வண்டியில் வசந்தசேனை உள்ளாள் என்று எண்ணி விதூடகன் உற்றுப் பார்க்கையில் ஆணாகிய ஆரியகனைக் காண்கிறான். எனவே, வசந்தசேனையில்லை; வசந்த சேனன் இவன் என்று உள்ளேயிருப்பது ஆண் எனக் குறிப்பிட வசந்தசேனன் இவன் என்று கூறுவது நகைச்சுவை நல்குவதாகும். (க310)*

**உச்சநிலை உத்தி**

*சொற்றொடர்களைப் பயன்படுத்துகையில் இறுதியில் உச்சநிலையில் உள்ள சொல்லை பயன்படுத்துவது உச்சநிலை உத்தியாகும்* (Crescendo) *"பாழ்" என்னும் சொல்லைத் திரும்பப் பயன்படுத்தி சூத்திரதாரன் பாடுகிறான். (க69)*

***மக்கள் இல்ல தோர் இல்லமும் பாழ்; நல***
***மிக்க நண்பர் இல் வாழ்க்கையும் பாழ்; செலும்***
***திக்கு முற்றும் சிறு தகை யோற்குப் பாழ்;***
***ஒற்க மிக்கவற்கு ஒல்லுவ யாவும் பாழ்.***
***மக்கள் இல்லாத இல்லம் பாழ்; நண்***
***பரில்லாத வாழ்க்கை பாழ்; சிறுதகை யோற்குச் செல்லும் திக்குமுற்றும் பாழ்;***

*வறுமை மிக்கவற்கு ஒல்லுவ யாவும்பாழ் என்கிறார் சூத்திரகன். இங்கே இறுதியாக "ஒல்லுவயாவும் பாழ்" என்று பாழ்நிலையின் உச்சத்தை உணர்த்துவதால் எனப்படும் உச்ச நிலை உத்தி* (Crescendo) *பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*வறுமையின் கொடுமையைப் பற்றிக் கூறும்போது உச்சநிலை உத்தி பயன்படுத்தப் பட்டுள்ளது. நண்பரால் நிந்தனை வரும்; பிறர் எள்ளுவர்; சுற்றமும் ஏவல் மக்களும் சினமுறச் செய்யும்; காதலி கொடுமையும் ஏற்படும்; காடுறை வேட்கை விளையும்; இறுதியில் "வீதரும் உள்ளத்து இன்னாத்தீ நனி தின்னாது எரிக்குமால் அந்தோ" என்று சாருதத்தன் கூறுவான். (க81)*

*சகாரன் தன்னைச் சிறந்த புருடன் எனவும், மனிதன் எனவும் கூறி இறுதியில் வாசுதேவனை ஒப்பவன் என்று கூறுகையில் உச்சநிலை உத்தி பயன்பட்டுள்ளது. (க339)*

**சொல்லை மீண்டும் பயன்படுத்தும் உத்தி**

*திரும்பத்திரும்பச் சொல்லைப் பயன்படுத்தும் உத்தி* (Repetition) *வசந்த சேனையிடம் சகாரன் பேசும் பேச்சில் தெரியவருகிறது.*

*பரபிருதிகையையாயினும், பல்லகவனை யாயினும், இளவேனிற் காலத்துள்ள ஏனைய எல்லாப் பொருட்களை யாயினும் கூவி அழை; கூவிஅழை என்கிறான் சகாரன். (க90)*

*சந்நியாசி கொலை செய்யப்படுகிறான் என்பதைக் கேட்டதும் வசந்தசேனை "கேடுவிளைந்தது; கேடு விளைந்தது" எனக் கதறுகிறாள். (க156)*

*துறவி அவிநயத்தாற் பழிக்கும்போது சகாரன் விடனை நோக்கி "என்ன சொல்கிறான் அவன்" என்று கேட்க, உடன் விடன் "தங்களைப் புகழ்கின்றான்" என்கிறான். உடனே சகாரன் மகிழ்ந்து "புகழ்ந்து சொல்; புகழ்ந்து சொல், மீண்டும் புகழ்ந்து சொல்;" என்று சொற்களைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகிறான். (க325)*

**உயர்வு நவிற்சி அணி**

*சந்தனகன் வீரகனை நோக்கி, சாருதத்தரையும், வசந்தசேனையையும் அறியாயாயின் ஆகாயத்தில் நிலவொளியோடுங் கூடிய திங்களஞ்செல்வனையும் அறியாதவன் ஆனாய் என்று கூறுகையில் உயர்வு நவிற்சி அணி வெளிப்படுகிறது. (க294)*

*இக்கணிகையின் இல்லம் இந்திரனது உத்தியான வனம் போல எனக்குப்புலப்படுகிறது என்ற விதூடகன் கூறுவதில் உயர்வு நவிற்சியணி பயின்று வந்துள்ளது. (க223) மேலும் இது விலை மகள் இல்லமோ! அன்றிக்குபேரன் கிருகத்தின் அளவோ என்று சிறப்பாக வர்ணித்துக் கூற எனக்கும் சொல்வன்மை இன்று எனக்கூறுகையிலும் உயர்வு நவிற்சியணி இடம்பெற்றுள்ளது. (க226).*

**பேசுவதுபோல அமைந்த உத்தி**

*நடையியல் உத்தி நம் கண்முன் இல்லாரிடம் அல்லது அஃறிணைப் பொருட்களிடம் பேசு வதுபோல் அமைக்கப்பட்ட உத்தி* (Apostrophe) *இவ்விலக்கியத்தில் கையாளப் பெற்றுள்ளது.*

*சாருதத்தனுடைய புதல்வன் பொன்வண்டி கேட்டு அழும் போது அதனைக்கண்டு வசந்த சேனை வருந்தி தெய்வத்தை அழைத்துப் பேசுவது போல நாடக ஆசிரியர் அமைத்துள்ளார்.*

*ஆ! தெய்வமே! தாமரையிலைக்கண் வீழ்ந்த நீர்த்திவலைகளைப் போன்ற மக்களுடைய செல்வங்களால் நீ விளையாடுகின்றாய். என்று கூறும்போது* Apostrophe *என்னும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. (க280)*

*வசந்தசேனையின்தாய் உண்டு பருத்திருப்பதைக் கண்டு விதூடகன் பரிகசிக்கும்போது, சேடி அவள் நான்காநாள் முறைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கிறாள். உடன் விதூடகன், நான்காமுறைக் காய்ச்சலே! இவ்வுதவியால் அந்தணனாகிய என்னையும் நோக்குவாயாக என்று கூறுகிறான். மேற்சொல்லப்பட்ட உத்தி இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (க225)*

**விடையை எதிர்பாராது வினவும் உத்தி**

*மதனிகை சருவிலகனிடம் "திங்களஞ் செல்வனிடத்திலிருந்து வெயில் தோன்றுமா? எனக் கேட்பது விடையை எதிர்பாராது வினவும் உத்தி*(Rhetorical question) *ஆகும். இக்கேள்விக்கு யாரும் பதிலை எதிர் நோக்குவதில்லை. (க206)*

*சாருதத்தன் நாடக இறுதியில் இறந்ததாகக் கருதிய வசந்தசேனை மீண்டு வந்ததைப் பார்த்து,*

***மற்றொரு வசந்தசேனை இவள்கொலோ வானினின்றும்***
***சொற்றவவ் வணங்கே மீண்டுஞ்***
***தொல் லுருக் கொடுவந்தாளோ?***
***பற்றுமென் மனமாழாந்து***
***பார்க்கின்ற திவளையே கொல்***
***பொற்றொடி வசந்தசேனை***
***போன்றினள் அல்ல ளேயோ?***

***(க464)***

*என்று கேட்கிறான்.*

*வண்டியினுள் ஒளிந்து நெடுந்தூரம் வந்த ஆரியகன் தனக்குள் சில வினாக்களைக் கேட்கிறான். அவற்றுக்கு அவன் பதில்களை எதிர்பார்க்கவில்லை. இதுவே விடையை எதிர்பாராது வினவும்* (Rhetorical question) *உத்தியாகும்.*

*இம்மரச்சோலையில் மறைந்து செல்லலாமா? அன்றி இவ்வண்டிக்குரிய தலைவரைப் பார்க்கலாமா? இச்சிறுமரச்சோலைக் கட்புகுதலால் பயனென்? எனத் தனக்குள் வினவிக்கொள்கிறான். (க308)*

*இவ்வாறு, மண்ணியல் சிறுதேர் என்னும் நாடகத்தில் உவமையணி, உருவகம், தற்குறிப்பேற்ற அணி, கூறியது கூறல், மாறுபடக்கூறல், சொல்லைத் திரும்பத்திரும்பப் பயன்படுத்தல், உயர்வு நவிற்சி, அஃறிணைப் பொருட்களையோ, அருகில் இல்லா தோரையோ விளித்துப் பேசுதல், உச்சநிலை உத்தி, விடை எதிர் பாராவினா எழுப்பும் உத்திமற்றும் நகைச்சு வை ஆகியன விரவிக்கிடத்தல் ஆராயப்பட்டு சான்றுகள் தரப்பட்டுள்ளன.*

**மண்ணியல் சிறுதேரில் கருத்தியல் கோட்பாடு**

*பத்துவகை நாடகங்களுள் மண்ணியல் சிறுதேர் சங்கீர்ணப் பிரகரணத்திலே அமைக்கப் பெற்றதாகும். இந்நாடகத்திற்கு அளித்த அணிந்துரையில் சுவாமி விபுலாநந்தர் இந்நாடக அமைப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:*

*பிரகரணத்தின் கதை கவியினாற் கற்பிக்கப்பட்ட கதையாயிருத்தல் வேண்டும். நிகழ்ச்சி பூவுலகத்தில் நடக்க வேண்டும். தலைவன் அமாத்தியன் (மந்திரி), விப்பிரன், வணிகன் என்னும் வகையில் ஒருவனாய்த் தீரசாந்தனாய், அபாயமுற்றவனாய், அறம், பொருள், இன்பம் மூன்றினையும் கருதியபொருளாகக் கொண்டவனாக வருதல் வேண்டும். தலைமகள் தலை மகனது மனைவியாகிய குலமகளாகவாவது விலைமகளாகவாவது இருக்கலாம். குலமகள் தலைவியாயின் சுத்தம் எனவும், விலைமகள் தலைவியாயின் விகிர்தம் எனவும், இருவரும் வரின் சங்கீர்ணம் எனவும் அழைக்கப்பெறும். மண்ணியல் சிறுதேர் சங்கீர்ணப் பிரகரணம் என்பது தெளிவாகின்றது (க16).*

*இந்நாடகத்திற்கு ஆராய்ச்சி மதிப்புரை அளித்த சோமசுந்தர பாரதியார் மண்ணியல் சிறு தேரைச் சிலப்பதிகாரத்துடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தில் "அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆகும்; உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பன அடிப்படைக் கோட்பாடுகளாகக் காட்டப்பெறுகின்றன. மண்ணியல் சிறுதேரிலும் அரைசியல் பிழைத்த மன்னன் கொல்லப்படுகிறான். கணிகையான வசந்தசேனை "வது" என்னும் குலமகள் பட்டம் பெறும் வண்ணம் நல்லொழுக்கத்தால்*

*மேம்படுகிறாள். ஆனால் ஊழ்வலியை மதிவலியால் வீழ்த்தமுடியும் என்றும், வசந்த சேனை எவ்வாறாயினும் தன்னைக் காப்பாற்ற வருவாள் என்றும் சாருதத்தன் நம்புகின்றான். அவ்வாறே வசந்தசேனை அவனைக் காப்பாற்றுகின்றாள்.*

***மதி வலி மாற்றும் விதிமுதலாக***
***வலியவர் கூறிய பல்லுரை வழக்கால்***
***அரிதினேறிட்ட துரிசுளேன் என்னும்***
***யான் புரி நல்லறன் வான்திறல் உடையதேல்***
***ஆதரம் பெருக்கும் காதற்கிழத்தி***
***என் பழிதுடைத்தே இன்புறுத்துகவே (க455)***

*என்று சாருதத்தன் நம்பிக்கையுடன் கூறும் சொற்களில் விதிவலியையும் வெல்ல முடியும் என்னும் கருத்து வலிமையுறுகிறது.*

*மண்ணியல் சிறுதேர் என்கிற நாடகத்தைத் தற்கால மேல் நாட்டறிஞரான அ.ஒ. கிரெய்மாஸ் என்பாரின் கட்டமைப்பில் பொருளுணர்தல்* (Structural Semantics) *என்னும் கொள்கையின் கீழ் ஆய்ந்து கருத்;துகளை விவரிக்க முடியும். இலக்கியத்தைப் பகுத்து ஆய்வு செய்யும்பொழுது ஒரு வாக்கியத்தில் அமைந்துள்ள சொற்களுக்கு இடையேயான உறவினைக் கண்டுபிடிக்க வேண்டும். வாக்கியத்தின் பொருளை வடிவமைக்கும்போது அதனுள் அமைந்த சிறு அலகுகளை ஒன்று சேர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உணர்வுபூர்வமாகச் சொற்களை ஆராய்வதும் மிக முக்கியமானதாகும்.*

*கிரெய்மாஸின் கருத்தின்படி கதைக்கருவில் ஆறுவினைஞர்கள்* (Actants) *உள்ளனர். வினைஞர்கள் என்றால் மனிதராகவோ அல்லது அஃறிணைப் பொருளாகவோ இருக்கலாம். "முனைபவர்"* (subject) *என்பவர் கதையை நகர்த்திச் செல்பவராவார். இவரின் விருப்பத்தை நிறைவேற்றுதலே "முடிவுநிலை"* (object) *அடைதல் ஆகும். முனைபவர் முடிவுநிலை அடைவதை "எதிர்ப்பவர்"* (opposer) *இருப்பார்கள். அதேபோல, அவர் முடிவு நிலையை அடைய உதவுபவர்களும்* (helper) *இருப்பார்கள். எதிர்ப்பவர் மற்றும் உதவுபவர் எண்ணிக்கையில் வேறுபடலாம். மற்றும் செய்தி அனுப்புபவர்* (sender) *மற்றும் பெறுபவர்* (Receiver) *என்பாரும் வினைஞராக உள்ளனர்.*

*கிரெய்மாஸின் கூற்றுப்படி மண்ணியல் சிறுதேரை ஆராயலாம். வசந்தசேனை என்னும் விலைமகள் குடும்பத்தில் பிறந்த பெண் நல்லொழுக்கத்தைப் பின்பற்றிச் சிறந்த ஆடவனை மணப்புரிந்து குலமகளாக வேண்டும் என்று விரும்புகிறாள். வசந்தசேனை என்னும் முனைபவர்* (Subject), *குலமகள் என்னும்* (Object) *நிலையை அடைய விரும்புகிறாள். இதற்குத் தடையாகச் சகாரனும், மன்னன் பாலகனும் எதிர்ப்பவராக* (opposers) *விளங்குகிறார்கள். வசந்த சேனையைக் காப்பாற்றிய புத்தத்துறவி சம்வாககன் மற்றும் "சாருதத்தன் குற்றமற்றவன்" என்று கூறிய தாவரகன் ஆகியோர் உதவிபுரிபவராக* (helpers) *விளங்குகிறார்கள். மன்னன் பாலகனைக் கொன்ற தோடல்லாமல் சாருதத்தனைச் சிறையிலிருந்து விடுவித்து ருசாவதிக்கு அரசானாக்கிய இடைச்சிறுவன் ஆரியகனும் உதவி புரிபவர்* (helper) *என்ற நிலையில் உள்ளான். சாருதத்தன் வசந்தசேனையை இரண்டாம் மனைவியாக மணம்புரிந்து கொண்டதும் ஆரியகன் வசந்த சேனைக்குக் குலமகளிர்க்கான "வது" என்னும் பட்டத்தினை அளித்தலால் உதவிபுரிபவர்* (helper) *என்று அறியப்படுகிறான்.*

*இரண்டு இலக்கியங்களிலும் மையக் கருத்தாக வணிகர்கள் ஆராய்ந்தறியாத அரசர்களின் தவறான தண்டனைக்கு ஆட்படுத்தப்படுகின்றனர். கோவலன் பாண்டிய அரசனின் சிலம்பைத்திருடியதாக மரணதண்டனைக்கு ஆளாகிறான். சாருதத்தனோ, வசந்த*

*சேனையின் நகைகளைத் திருடி அவளைக் கொன்றதாகப் பொய்க்குற்றம் சாட்டப்பெற்று மரணதண்டனை விதிக்கப்படுகிறான். நல்வினை வாய்ப்பாக, புத்தத்துறவி வசந்த சேனையை உயிருடன் கொணர்ந்து சாருதத்தனைக் காப்பாற்றுகிறார். சிலப்பதிகாரம் துன்பியல் இலக்கியமாக விளங்குகிறது. மண்ணியல் சிறுதேரோ, இடையில் கதைத்தலைவருக்குத் துன்பங்கள் நேரினும் இறுதியில் இன்பமாக முடிகிறது.*

## References


1. *கதிரேசச் செட்டியார் மு.மண்ணியல் சிறுதேர். சென்னை: ஆனந்த நிலையம் 2000.*
2. *மீரா.மண்ணியல் சிறுதேர்-ஒரு மதிப்பீடு தஞ்சாவூர் : அன்னம், 2004*
3. Bertens, Hans. Literary Theory. London: Routledge, 1995.
4. Greimas, A.J. Strucutral Semantics: An Attempt at a Method. California: Univ of Nebraska Press, 1983.
5. Murry, J.Middleton. The problem of Style London : O.U.P. 1961.
6. Leech, Geoffrey. A Linguistic Guide to English Poetry. London: Longman, 1979.